தமிழ்மணம்
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies
E-ISSN: 3049-0723 & P-ISSN: 3107-7781
Volume 7, Number 01, January 2026

# The virtues prescribed by Siddhanta

**Dr. N. Aravindkumar***
*Assistant Professor, Department of Tamil, KPR College of Arts, Science and Research, Coimbatore, Tamil Nadu, India.*
*Email: aravindanbu4321@gmail.com,*

***Corresponding Author** aravindanbu4321@gmail.com

**ARTICLE INFO**
*Article history:*
Received
December 24, 2025
Revised
December 24, 2025
Accepted
December 26, 2025
Published
January 01, 2026

**ABSTRACT**

The emergence of virtuous actions that contribute to the upliftment of human life requires clear thinking and a selfless disposition. One of the primary factors that cultivates noble thoughts in the human mind is divine worship. Through devotion to God, individuals attain mental peace and develop positive moral values. With the objective of emphasizing that the outcomes of human life are determined by one's actions, various religions have formulated philosophical doctrines. In this context, Saivism, which worships Lord Siva, is founded upon the philosophical system known as Saiva Siddhanta. According to this doctrine, if a person leads a life of purity and moral discipline, they will ultimately attain moksha—the state of supreme bliss—by uniting with the Divine. Saiva Siddhanta also explains the paths through which this liberation can be attained. Based on the nature of one's actions and spiritual maturity, an individual progresses through four distinct paths leading to liberation, namely Charya, Kriya, Yoga, and Jnana. Saiva Siddhanta asserts that for a soul to attain these four paths of liberation, it must remain rooted in ethical conduct and acquire spiritual refinement.These four paths of liberation articulated by Saiva Siddhanta are designed to elevate human life to a higher spiritual state. By structuring one's life and actions in accordance with moral discipline, an individual can experience everlasting bliss. This fundamental principle is clearly understood through the concept of the fourfold path to liberation as propounded by Saiva Siddhanta.

**Key words**: *Charya, Kriya, Yoga, Jnana, Saiva Siddhanta.*

Journal Homepage: https://tamilmanam.in/journal/
This is an open access article under the License Creative Commons Attribution 4.0 International License
http://Creativecommons.org//license/by/4.0/

# சித்தாந்தம் கூறும் நாளெறிகள்

* முனைவர் ந. அரவிந்த்குமார், உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
கேபிஆர் கலை அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக்கல்லூரி, அரசூர், கோயம்புத்தூர்.

**ஆய்வுச்சுருக்கம்**

மனித வாழ்வின் உயர்வுக்குக் காரணமான நற்செயல்பாடுகள் தோன்றுவதற்குத் தெளிவான சிந்தனையும், சுயநலம் இல்லாத குணமும் வேண்டும். மனிதனின் மனங்களில் உயர்வான சிந்தனையை உருவாக்குவதற்குக் காரணமாக இருப்பது இறைவழிபாடு ஆகும். இறைவழிப்பாட்டின் மூலம் மனிதன் மன அமைதியையும், நல்ல பண்புகளையும் கற்றுக்கொள்கிறான். மனிதன் செய்யும் செயலுக்கு ஏற்ப அவனுடைய வாழ்க்கையில் பயன் கிடைக்கும் என்பதை வலியுறுத்தும் நோக்கில் பல சமயங்கள் தத்துவக் கொள்கைகளை உருவாக்கித் தந்துள்ளன. அந்நிலையில் சிவனை வழிபடும் சைவ சமயம் சித்தாந்தம் என்ற தத்துவக்கொள்கையினைக் கொண்டுள்ளது. அச்சித்தாந்தத்தில் மனிதன் தூயநெறியில் வாழ்ந்து வந்தால் இறுதியில் இறைவனோடு சேர்ந்து பேரின்பத்தை அடையும் முத்தியைப் பெறுவான் எனக்கூறப்பட்டுள்ளது. அந்த முத்தியை அடைவதற்கு உண்டான வழிகளையும் சித்தாந்தம் மொழிகிறது. மனிதன் தன் செயல்பாட்டிற்கு ஏற்ப நான்கு வகையான முத்திக்குரிய மார்க்கத்தை அடைகிறான். அவை,

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பதாகும். இந்த நால்வகை முத்தி மார்க்கத்தையும் ஒரு உயிர் அடைய, அந்த உயிர் ஒழுக்கநிலையில் நின்று பக்குவத்தைப் பெறவேண்டும் எனச் சித்தாந்தம் கூறுகிறது. சித்தாந்தம் கூறும் இந்த நால்வகை முத்தி மார்க்கமும் மனித வாழ்க்கையை மேன்மை அடையச் செய்ய உருவாக்கப்பட்டது. மனிதன் தன் வாழ்வியல் செயல்பாட்டை ஒழுக்கமுடையதாக அமைத்துக் கொண்டால் அவனது வாழ்க்கையில் எப்போதும் பேரின்பம் நிலைத்திருக்கும் என்ற கருத்தை நாம் சித்தாந்தம் கூறும் முத்தி மார்க்கத்தால் உணரலாம்.

**திறவுச்சொற்கள் :** சரியை, கிரியை, யோகம், ஞானம், சித்தாந்தம்

**முன்னுரை**

உயிர்கள் மேன்மை அடைவதற்குக் காரணமாக இருப்பவை ஒழுக்கநெறிகளாகும். அந்த ஒழுக்கநெறியை அடைய காரணமாக இருப்பது இறை வழிபாடு. அவ்விறை வழிபாடு மனிதன் தோன்றிய காலத்திலிருந்தே இருந்து வருகிறது. மனிதன் காடுகளில் வாழ்ந்த சமயத்தில் தம் கண்ணுக்குத் தெரியும் வெளிச்சத்தை வணங்கினான். அதன் காரணம் இரவு நேரத்தில் இருள் சூழ்ந்து இருப்பதால் விலங்குகளின் அச்சுறுத்தல் அதிகம். விலங்குகளிடமிருந்து வரும் ஆபத்து ஒளி நிறைந்த பகல் நேரத்தில் மனிதனுக்கு ஏற்படுவதில்லை. அதனால், மனிதன் விலங்கின் மூலம் ஏற்படும் அச்சத்திலிருந்து தன்னைப் பாதுகாக்கும் ஒளியைக் கடவுளாக வணங்கினான். தன் அறிவு முதிர்ச்சியால், தான் வழிபடும் கடவுளைத் தனக்கு அண்மையில் வைத்து வழிபடவிரும்பினான். அதனால் ஒரு பெரிய குழியை அகழ்ந்து, அதில் மரக்கட்டைகளைப் போட்டு, தீ வைத்து, அந்த நெருப்பைக் கடவுளாக வணங்கினான். தான் வணங்கும் கடவுளுக்குப் பல வகையான இயற்கைப்பொருள்களைப் படைக்க எண்ணினான். ஆனால், நெருப்பினுள் போடும் பொருள் எரிந்து சாம்பலாகி விடுவதால், கல்லை நட்டு அதற்குத் தாம் எண்ணியவாறு வழிபாடுகள் நடத்தினான். பின், அக்கல்லைச் சுற்றிப் பெரிய ஆலயம் அமைத்தான். அந்த ஆலயம் பெரும்பாலும் நீர்நிலை சார்ந்து அமைந்திருந்தது. ஆலயத்தில் இருக்கும் இறைவனுக்குப் பலவித பூசைகள் செய்து, திருவிழாக்கள் எடுத்து வழிபட்டான். இறைவனுக்கு என்று பூசைமுறைகள், வழிபாடு நெறிகள், தத்துவங்களை உருவாக்கினான். மனிதன் ஆலயம் அமைத்து வழிபட்டதன் பயனாய் மனிதர்களுக்கு இடையில் நல்ல பண்புகளும், ஒழுக்கவுணர்வுகளும் மேம்பட்டன. இறைவன் வீற்றிருக்கும் ஆலயம் மன ஒருமைப்பாட்டுடன் மகிழ்வையும் அளித்தது. ஆலயங்கள் இறைவழிபாட்டிற்கு மட்டுமின்றி கலைகள் வளர்ச்சி அடைவதற்கு உண்டான இடமாகவும் அமைந்தன. ஆலயத்தில் உள்ள இறைவனை வழிபடுவதால் மனிதர்கள் நல்ல நெறிகளைப் பேணி ஒழுக்கத்துடன் வாழ்ந்தனர். நல்ல ஒழுக்கத்துடன் வாழும் போது மனிதனுக்கு எவ்விதத் தீய எண்ணங்களும் எழவில்லை. தீயவழியே செல்லாத மனிதன் தன் வாழ்க்கையின் இறுதியில் உயர்வான நிலைக்குச் செல்வான் என்பதை உணர்த்துவதே முத்தியாகும். வாழும் காலத்தில் நல்ல பண்போடு வாழ்ந்து நல்ல வழியில் சென்ற மனிதன் இறப்பிற்குப் பின் இறைவனோடு சேர்வான் என்பதையே முத்தி என்று சமயச்சான்றோர் வகுத்துரைத்துள்ளனர்.

**முத்தி**

உலகில் உள்ள அனைத்துச் சமயங்களும் ஒழுக்கவுணர்வுடன் நல்ல நெறியைப் பின்பற்றி வாழ்ந்தால் மனிதனுக்கு முத்தி கிடைக்கும் என வலியுறுத்துகின்றன. ஒவ்வொரு சமயம் முத்தியைப் பற்றிப் பல விதமான கருத்துகளைக் கூறுகின்றன. அதில் சிவனைக் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயமான சைவ சமயம் சித்தாந்த அடிப்படையில் முத்திக்கான நான்கு மார்க்கங்களைக் கூறுகிறது. சித்தாந்த அடிப்படையில் முத்தி என்பது சிவனுடைய திருவடியை அடைவதே ஆகும். அதாவது. ஆன்மா தன்னுள் இருக்கும் மும்மலங்களான ஆணவம், கன்மம், மாயை முதலியவற்றிலிருந்து நீங்கி, சிவனின் திருவருளைப் பெற்று, ஆன்மாவும் சிவனும் வேறில்லை, இரண்டும் ஒன்றே என இருக்கும் நிலையாகும். சிவனும் ஆன்மாவும் ஒன்றுசேர்ந்திருக்கும் நிலையை அத்துவிதம் எனச் சித்தாந்தம் கூறுகிறது. உதாரணமாக, காந்தம், இரும்பைத் தன்பக்கம் இழுப்பது போல் உயிர்களை இறைவன் தன் திருவருளினால் தன்பக்கம் இழுத்து சேர்த்துக்கொள்கிறான். அதன்பின், நெருப்பிலிட்ட இரும்பை நெருப்பானது தன்மயமாக்குவதைப்போல உயிர்களைச் சிவன் தன்மயமாக்குகின்றான். நெருப்பு தன்னில் இட்ட இரும்பின் கறையை நீக்கிச் சுத்தம் செய்வது போல் இறைவன் தனது அருட்சக்தியால் உயிர்களின் ஆணவத்தை அழித்து முத்தியைக் கொடுக்கிறான். உப்பானது நீரில் கலந்து அந்த நீரை உப்புச்சுவையுடையதாக மாற்றுவது போல், இறைவன் தன் தன்மையை உயிருக்கு அளித்துப் பக்குவம் அடையச்செய்கிறான். இவையெல்லாம் முத்திக்குரிய காலத்தில் உயிர்கள் அடையும் பக்குவநிலையெனச் சித்தாந்தம் கூறுகிறது. தன் வாழ்க்கையில் சரியான பாதையில் சென்று நன்மையை மட்டும் செய்கின்ற உயிருக்கு மட்டுமே முத்தியானது கிடைக்கும் என இங்கு சொல்லப்படுவதால், மனிதன் தன் வாழ்க்கையில் எப்போதும் தீய வழியில் செல்லக்கூடாது என்ற அறம் வழியுறுத்தப்படுவதைக் காணலாம். இறைவனோடு உயிர்கலந்திருக்கும் அத்துவித நிலையில் சிவானந்த பேரின்பத்தை அடைகிறது. இறைவனோடு சேர்வதே உயிருக்குப் பேரின்பம். மற்றபடி, இந்த உலகில் உள்ள மற்ற செல்வங்கள், உடம்பு இவையெல்லாம் சிற்றின்பம் ஆகும். அவையாவும் நிலையில்லாதது. நிலையில்லாத பொருள்களின் மீது ஆசைகொண்டு வாழ்வது மனித வாழ்க்கைக்கு ஏற்புடையதில்லை என்பது இங்கு உணர்த்தப்படும் கருத்தாகும்.

**முத்தியின் மார்க்கங்கள்**

உயிர்கள் அடையும் பக்குவத்தால் பெறும் முத்தியைச் சைவசித்தாந்தம் நான்கு மார்க்கங்களாகக் கூறுகின்றன. அவை, சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவாகும். சைவ சமயத்தின் சிறப்பு நிலையாக அமைந்தவை ஆகமங்கள். ஆகமம் என்பதன் பொருள் ஆன்மாக்களை மலங்களிலிருந்து நீக்கி முத்தியை அருளுவது என்பதாகும். இந்த ஆகமங்கள், உயிர் தன் மனப்பக்குவத்திற்கு ஏற்ப சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு மார்க்கங்களை அடைகின்றன எனக்கூறுகிறது. உதாரணமாக, ஒரு மாணவன் முதலில் ஆரம்பப்பள்ளியில் பயில்கிறான். அதன்பின் நடுநிலைக்கல்வியைக் கற்கிறான். அதன்பின் உயர்நிலைக் கல்வியைக் கற்றுக்கொள்கிறான். அதன்பின் கல்லூரிக்குச் சென்று பட்டப்படிப்பை மேற்கொள்கிறான். இப்படி ஒரு மாணவன் படிப்படியாகக் கல்வி நிலையில் பக்குவம்

அடைவதைப்போல், உயிரானது சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு நிலையில் படிப்படியாகப் பெற்ற பக்குவத்திற்கேற்ப முத்தியை அடைகிறது.

**சரியை**

சரியை என்பது ஒழுங்கான வழியில் நடத்தல் என்ற பொருளைத் தருகிறது. உதாரணமாக, எஜமானனிடம் ஒரு வேலைக்காரன் விசுவாசத்துடன் நடந்துகொண்டு, அந்த எஜமானனின் அன்புக்கு உரியவனாகி, அதனால் அவன் அடையும் நன்மதிப்பைப் போல், ஆண்டவனாகிய எஜமானனிடம் விசுவாசமுடன் நான் தொண்டாற்றி, அவனால் அளிக்கப்படும் நல்ல பேறுகளை ஆன்மா பெறுவது சரியை ஆகும். இதைத் தாசமார்க்கம் என்றும் கூறுவர். சரியை நெறியில் நின்ற மனிதர்கள் அடையக்கூடிய முத்தியைச் சாலோக முத்தி என்று கூறுவர். அதாவது சிவன் வீற்றிருக்கும் உலகத்தில் சேர்ந்து இன்பம் அடைகின்ற நிலையாகும்.

**கிரியை**

கிரியை என்பது தான் நாள்தோறும் கடவுளை உள்ளும் புறமுமாக வழிபடும் பூசை முறையாகும். இந்தப் பூசைமுறை ஆன்மார்த்தம், பரார்த்தம் என்ற இருவகையாக அமைகிறது. ஆன்மார்த்தம் என்பது தனக்காக இறைவனிடம் வேண்டிக்கொள்ளும் வழிபாட்டு முறையாகும். பரார்த்தம் என்பது மற்றவர்களுக்கான இறைவனிடம் வேண்டிக்கொள்ளும் வழிபாட்டு முறையாகும். இப்பரார்த்த வழிபாட்டில் நித்தியம், நைமித்தகம், காமியம் என்ற மூன்று பிரிவுகள் உண்டு. இக்கிரியை நெறியைச் சற்புத்திரமார்க்கம் என்பர். அதன் காரணம் கிரியை நெறியைப் பின்பற்றியவர்கள் சிவன் வீற்றிருக்கும் உலகில் இறைவனுக்கு அருகில் அவரின் குழந்தையைப் போல் இருப்பார்கள் என்பதால். கிரியை நிலையில் அடையும் முத்தியை சாமீபம் எனக்கூறுவர்.

**யோகம்**

ஒரு பக்தன் தன் வெளித்தோற்றத்தைத் துறந்து, தன் மனதினுள் இருக்கும் இறைவனோடு ஒன்றுசேர்ந்து இன்பம் அனுபவிக்கும் நிலையே யோகம் ஆகும். யோகம் என்பதற்குச் சேர்க்கை என்பது பொருள். அதாவது, ஜீவாத்மா பரமாத்மாவான இறைவனோடு சேர்தல் என்பது பொருள். இதைச் சகமார்க்கம் என்பர். அதாவது இறைவனுடைய வடிவத்தைப் உயிர் பெற்று, ஒரு நண்பனைப் போல் சிவனுடன் இணைந்திருக்கும் நிலையாகும். இந்த யோக நிலையில் ஆன்மா அடைகின்ற முத்தி சாரூபம் என வழங்கப்படுகிறது.

**ஞானம்**

ஞானம் என்பது வேதாகமங்கள், புராண, இதிகாசங்கள் முதலிய சாத்திரங்களை முழுமையாகக் கற்றுணர்ந்து, அவற்றின் சிறப்புகளை எல்லாம் சிறந்த குரு ஒருவரிடம் பாடம் கேட்டு, கேட்டவற்றைச் சிந்தித்து, அவ்வாறு சிந்தித்துப் பெற்ற தெளிவின் வழியே செல்வதாகும். இந்த ஞானத்தைச் சன்மார்க்கம் என்று கூறுவர். இந்த ஞான நிலையில் ஆன்மா அடைகின்ற முத்தியைச் சாயுஜ்ஜியம் என்பர். அதாவது, ஆன்மா இறைவனோடு ஒன்றாகச் சேர்ந்து பேரின்பத்தில் திளைத்திருக்கும் நிலையாகும்.

**முடிவுரை**

DOI : https://doi.org/tm07010126

ஆன்மாக்கள் தம் உயிரை நேசிப்பது போல் பிற உயிர்களையும் நேசிக்க வேண்டும் என்ற அறத்தை வலியுறுத்துவதே சமயங்களின் நோக்கமாகும். அறத்தோடு வாழும் ஆன்மா இறுதியில் இறைவனோடு சேர்ந்து நிலையான இன்பத்தைப் பெறுகிறது என்பதைக் கூறுவதே முத்தி நிலையாகும். ஒவ்வொரு சமயமும் முத்திக்கான வழிகளைப் பலவாறு கூறுகின்றன. அதில் சிவனை வழிபடும் சைவ சமயம், சித்தாந்தம் கூறும் நான்கு மார்க்கங்களான சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கையும் முத்திக்கான மார்க்கங்களாகக் கூறுகின்றன. இந்த நான்கு நிலையில் உயிர்கள் அடையும் முத்தி என்பது அதன் பக்குவ நிலைக்கு ஏற்ப கிடைப்பதாகும். முத்தியை அடைய நினைக்கும் ஆன்மாக்கள் எப்போதும் தீய வழியில் செல்லாது, தீய உணர்வுகளை நினைக்காது, பிறருக்கும் எப்போதும் தீயவற்றைச் செய்யாது என்பதே அடிப்படையான உண்மையாகும். ஆன்மாக்களை நல்ல வழியில் வாழ வைக்கவேண்டும் என்ற நோக்கிலேயே சித்தாந்தம் முத்திக்கான மார்க்கத்தை நான்காக வகுத்துக்கூறுகிறது என்பது இங்கு உணர்த்தப்படும் மெய்ம்மையாகும்.

**பார்வை நூல்கள் (Works Cited)**


- **ஆறுமுக நாவலர், கே.** ***இந்து சமய இணைப்பு விளக்கம்.*** **அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் வெளியீடு**, 2022.
- **சுப்புரெட்டியார், ந.** ***சைவமும் தமிழும்.*** **சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்**, 2001.
- **மாணிக்கம், அ., உரை ஆசிரியர்.** ***திருமந்திரம்.*** **வர்த்தமானன் பதிப்பகம்**, 2001.
- **முருகவேள், ந. ரா., உரை ஆசிரியர்.** ***சிவஞானபோதம்.*** **ஞானசம்பந்தம் அச்சகம்**, 1977.
- **வரதராஜன், ஜி.** ***திருமந்திர நெறி.*** **தெய்வத்தமிழ் மன்றம்**, 1976.



**Copyright Holder:**
© Author(s) (2026).

**First Publication Right:**
© Tamilmanam International Research Journal of Tamil Studies

**This article is under:**